4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் திரு. M. நம்பிராஜன், பி.ஏ., பி.எல்., 4வது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

அ.வ.எண். 48/2017 நாள்: 28.08.2025 வா.சா.1 – ராஜாமணி

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

அடமானத்தொகையில் நான் கொடுத்த பங்கிற்காக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 2ம் வாதி கண்ணப்பனின் பங்கிற்காக நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். 2ம் வாதி எவ்வாறு சம்பாதித்து எவ்வகையில் அடமானத்தொகையை கொடுத்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி 2ம் வாதி கொடுத்த அடமான தொகை சம்பந்தமாக அவருடைய வருமான வரி கணக்கில் காட்டியுள்ளாரா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அடமான கடன் தொகையை 2 பிரதிவாதிகளும் சேர்ந்து செலுத்த வேண்டும் என்று தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். தாவா சொத்தின் சுவாதீனம் K.R.தினேஷ்க்கு கொடுக்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாவா சொத்து சம்பந்தமாக அடமான கடன் ஏற்படுத்தும் போது தாவா சொத்தில் முருகன் சைக்கிள் ஸடாண்டு என்ற மிதிவண்டி காப்பகம் நடந்து வந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி முருகன் சைக்கிள்

ஸடாண்டை காலி செய்வது சம்பந்தமாக உடுமலைபேட்டை சார்பு நீதிமன்றத்திலும், தாராபுரம் சார்பு நீதிமன்றத்திலும் வழக்குகள் நடந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் தன்னையும் ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று நான் மனு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி மாலதி நான் மனு தாக்கல் செய்த தேதியன்று தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் தன்னையும் தரப்பினராக மேற்படி வழக்கில் சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளித்தால் தண்டனை உண்டு என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி தாராபுரம் சார்பு நீதிமன்றத்தில் குத்தகைதாரர் தங்கவேலு என்பவருக்கும், K.R.தினேஷ்–ன் தகப்பனார் திரு.K.ராமலிங்கம் அவர்களுக்குமிடையே ஒரு பைசல் பேசப்பட்டு மேற்படி தங்கவேலு என்பவர் உரிமையாளர் திரு.K.ராமலிங்கத்திடம் மேற்படி தாவா சொத்தை ஒப்படைத்துவிட்டார் என்ற விவரம் எனக்கு தெரியாது. K.R.தினேஷ்க்கும், எனக்கும் உடுமலைபேட்டை சார்பு நீதிமன்றத்தில் ஏற்றுதலை ஆற்றுக பரிகாரம் கோரிய அசல் வழக்கு எண்.190/2016 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை சத்திய பிரமாண வாக்குமூலத்தில் குத்தகைதாரர் தங்கவேலு இந்த வழக்கு சொத்தை உரிமையாளர் K.ராமலிங்கம் என்பவரிடம் ஒப்படைத்துவிட்டார் என்று நான்

சொல்லியுள்ளேன் என்றால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். தாவா சொத்து சம்பந்தமாக செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தியிருந்தாலும், தாவா சொத்தின் சுவாதீனத்தை K.R.தினேஷ்க்கு திரு.K.ராமலிங்கத்தால் வழங்கப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து இந்து கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் K.R.தினேஷ் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தது தவறு என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.5, 6, 7, 8, 9, 11, 12 ஆவணங்களை 2ம் பிரதிவாதி மாலதியிடமிருந்து நான் வாங்கி தாக்கல் செய்துள்ளேன் என்றும், அதனால் நானும், மேற்படி 2ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் இந்த வழக்கை நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எதிராக பாகபிரிவினை கோரி அசல் வழக்கு எண்.238/2016 என்ற வழக்கை தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் நானும், கண்ணப்பனும் தரப்பினர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி வழக்கில் நானும், கண்ணப்பனும் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதிக்கு பாகபிரிவினை வழங்குவதில் எங்களுக்கு சம்மதம் என்று தெரிவித்துள்ளோம் என்றால் சாட்சி அது பற்றி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் வேண்டும் என்றே அனைத்து விவரங்களையும் தெரிந்து கொண்டு ஞாபகம் இல்லை என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.  தாவா அடமான கடன் பத்திரம் எனக்கும், K.R.தினேஷ்க்கும் ஏற்பட்ட கிரைய உடன்படிக்கை, 2ம்

பிரதிவாதி எனது பெயரில் 23.08.2016 ஏற்படுத்திக்கொடுத்த கிரைய ஆவணம் ஆகியவை செல்லாது என்று உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.376/2022 என்ற வழக்கை 1ம் பிரதிவாதியின் மகன் R.விசாக பிரபு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சாட்சி வழக்கு நிலுவையில் உள்ளது, அதில் என்ன பரிகாரம் கோரியுள்ளார்கள் என்று தெரியாது என்று கூறுகிறார். மேற்படி வழக்கு சம்பந்தமான விவரம் தெரியும் என்றும், வேண்டும் என்றே உண்மையை மறைத்த பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து உடுமலைபேட்டை, மத்திய பேருந்து நிலையத்தை ஒட்டியே அமைந்துள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். தற்போது சாட்சி பேருந்து நிலையத்திலிருந்து தூரமாக உள்ளதாக கூறுகிறார். தாவா சொத்தை நான் அடமானம் பெறும் போது பார்த்தேன். அது உடுமலைபேட்டை, மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் உள்ளது என்று தெரிந்து தான் அடமானம் பெற்றேன் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி பேருந்து நிலையத்திலிருந்து எவ்வளவு தூரத்தில் உளளது என்று எனக்கு தெரியாது. நான் 2017 ம் ஆண்டு இவ்வழக்கை தாக்கல் செய்தேன். K.R.தினேஷ்-ம், நானும் செய்து கொண்ட கிரைய உடன்படிக்கை சம்பந்தமாக வழக்கை உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்றத்தில் 2016 ம் வருடம் தாக்கல் செய்தேன். மேற்படி வழக்கில் உள்ள தாவா சொத்தும், இந்த வழக்கில் உள்ள தாவா சொத்தும் அருகருகில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி கிரைய உடன்படிக்கை வழக்கில் குறிப்பிட்டுள்ள சொத்து பேருந்து

நிலையத்திற்கு அருகில் உள்ளது என்று சொன்னால் சாட்சி அது பற்றி தெரியாது என்று கூறுகிறார். உடுமலைபேட்டை, சார்பு நீதிமன்ற அசல் வழக்கு எண்.190/2016 வழக்கில் நான் மத்திய பேருந்து நிலையத்திற்கு அருகில் மேற்படி வழக்கில் உள்ள சொத்து இருப்பதாக நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சாட்சி ஞாபகம் இல்லை என்று கூறுகிறார். நான் இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு மேற்படி சொத்து எங்கிருக்கிறது என்று நான் பார்த்தேனா என்றால் சாட்சி தற்போது தான் பேருந்து நிலையம் வந்துள்ளது, எனவே அது சம்பந்தமாக நான் சென்று பார்க்கவில்லை என்று கூறுகிறார். புதிய பேருந்து நிலையத்தை ஒட்டி, பழைய பேருந்து நிலையம் சுமார் 50 முதல் 60 வருடங்களாக உள்ளது என்று சொன்னால் சாட்சி புதிய பேருந்து நிலையத்திலிருந்து பழைய பேருந்து நிலையம் தூரமாக உள்ளது என்று கூறுகிறார். எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று எனக்கு தெரியாது. புதிய பேருந்து நிலையத்திற்கும், பழைய பேருந்து நிலையத்திற்கும் இடையில் புறவழிச்சாலை ஒன்று மட்டும் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் உடுமலைபேட்டையில் 25 ஆண்டுகளாக குடியிருந்து வருகிறேன். நான் மேற்படி காலகட்டங்களில் உடுமலைபேட்டை பேருந்து நிலையத்திற்கு சென்றுள்ளேன். பழைய பேருந்து நிலையத்திற்கு கிழபுறம், புதிய பேருந்து நிலையம் உள்ளது என்று சொன்னால் சாட்சி இடையில் கடைகள் உள்ளதாக கூறுகிறார். எனக்கு பழைய பேருந்து நிலையமும், புதிய பேருந்து நிலையமும் தெரியும் என்றும், தாவா சொத்து பேருந்து நிலையங்களை தொட்டு

உள்ளதால், அது அதிக மதிப்புடையது என்பதை மறைப்பதற்காக, தாவா சொத்து இருக்கும் இடம் சரியாக தெரியவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் 9வது பத்தியில் சொல்லியிள்ள சங்கதிகளை நான் வழக்குரையில் சொல்லியுள்ளேன். நான் வழக்குரையில் அவ்வாறு சொல்லவில்லை, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. K.R.தினேஷ் உடன் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தத்தை கிரையமாக முடித்து தர வேண்டும் என்று இந்த வழக்கு 1, 2 பிரதிவாதிகளுக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி அறிவிப்புக்கு 1, 2 பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். மேற்படி பதில் அறிவிப்பில் K.R.தினேஷ் உடன் நான் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தம், அடமானம் ஆகியவை பற்றி தெரியாது என்று சொல்லியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.3 ன் படி இந்த வழக்கு 2 பிரதிவாதிகளும் எனக்கு பதில் அறிவிப்பு அனுப்பினார்கள் என்று சொன்னால் சாட்சி அது பற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். இந்த வழக்கில் உள்ள பதில் அறிவிப்பை மேற்படி 2 பிரதிவாதிகளும் எனக்கு அனுப்பிய பிறகு தான் 2வது பிரதிவாதி எனது பெயருக்கு கிரைய உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பாதி சொத்தை கிரையம் எழுதி கொடுத்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது என்று சாட்சி கூறுகிறார். நானும், 2வது பிரதிவாதியும் கூட்டு சதி செய்து, தாவா சொத்தையும், பிற சொத்துக்களையும் அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக வழக்கு

தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.238/2016 வழக்கு சம்பந்தப்பட்ட தாவா சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியும். 2ம் பிரதிவாதிக்கு இரண்டாவது திருமணம் நடந்துவிட்டது என்று சொன்னால் சாட்சி அது பற்றி எனக்கு தெரியாது என்று கூறுகிறார். நானும், மாலதியின் தகப்பனாரும் சேர்ந்து தான் மாலதிக்காக வழக்கறிஞரை நியமித்து வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்ட, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.

Sd/–M.Nambirajan.
4வது கூடுதல் மாவட்ட நீதிபதி,
உடுமலைப்பேட்டை.